தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை

**விலை ரூ. 20/-**
மலர் 25
இதழ் 07
நவம்பர் 2023

# முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்



## சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதில் சாதனை படைத்து வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

## அன்புள்ள சுய உதவிக்குழு சகோதரிகளே,

சுய உதவிக்குழுக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை மாநிலத்தின் அனைத்துப் பகுதியில் வசிக்கும் மகளிரிடமும் கொண்டு சேர்க்கும் உன்னதப் பணியினை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்க அலகுகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி சிறப்புற மேற்கொண்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளால், தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த பெண்களும் பொருளாதார சுய சார்பு பெற்று வருகின்றனர் என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள் மூலம் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக்குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள், நகர்ப்புர அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றுக்கு ஆதார நிதி, சமுதாய முதலீட்டு நிதி, நலிவுற்றோர் மேம்பாட்டு நிதி போன்றவை வழங்கப்படுகின்றன. மேலும், சுய உதவிக்குழுக்களின் பொருளாதாரத்தை உயர்த்திட அவர்களுக்கு வங்கிக்கடன் இணைப்புகள் வழங்குவதில் நாம் சாதனைகளை படைத்துள்ளோம் என்பதை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

விவசாயத்தில் ஈடுபடும் பெண் விவசாயிகள் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி விவசாயப் பணிகள் மேற்கொள்ளும் வகையில் விவசாய இயந்திரங்களின் வாடகை மையங்களை அமைக்க மானியத்துடன் கூடிய கடனுதவி, சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் வகையில் விற்பனைக் கண்காட்சிகளை நடத்துதல் போன்ற ஏராளமான திட்டங்களை செயல்படுத்துவதில் நாம் நாட்டிலேயே முன்னணியில் இருக்கிறோம் என்பது பெருமை கொள்ளக் கூடியவையாகும்.

குறிப்பாக நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்கள், தனிநபர்கள், சுய உதவிக்குழுக்கள், தெருவோர வியாபாரிகள், ஒத்த தொழில் குழுக்கள் போன்றவற்றிற்கு கடன் உதவிகள், தெருவோர வியாபாரிகளுக்கு கடனுதவிகள், திறன் மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், நகர்ப்புர வாழ்வாதார மையங்களை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் நகர்ப்புர ஏழை மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்து வருவதும் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

அதேபோல் தீன்தயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் (DDU-GKY) திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு பல்வேறு நிறுவனங்களில் பணி வாய்ப்புகள் பெற்றுத் தரப்படுகின்றன.

**“அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்**

என்ற குறள் வரிகளுக்கேற்ப உங்களின் அயராத உழைப்பால் மேலும் பல வெற்றிகள் உங்களைத் தேடி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.


மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com



tncdwH  Tncdw State
www.Tncdw.org  Tncdwofficial


“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்..”

## குறளும் – பொருளும்

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனி இருப்பக் காய்கவர்ந்தற்று**

– (குறள்: 100)

இனிமையான சொற்கள் இருக்கும் போது அவற்றை விடுத்துக் கடுமையாகப் பேசுவது கனிகளை ஒதுக்கிவிட்டுக் காய்களைப் பறித்துத் தின்பதற்குச் சமமாகும்.

# உள்ளே...


| | |
|---|---|
| உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155–ஆவது பிறந்தநாள் விழா | 5 |
| பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | 11 |
| சட்டம் என்ன சொல்கிறது? | 14 |
| முதலமைச்சரின் காலை உணவு திட்டம் குறித்து ஆய்வு | 17 |
| மசாலா இட்லி | 32 |
| தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் | 33 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல் களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
# முற்றம்
விலை ரூ. 20/– • மலர் 25 • இதழ் 07 • நவம்பர் 2023

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பா.ஜெயசுதா,** பொது மேலாளர் (பொ),

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

## பண்படுத்தப்படவேண்டிய சிறார்கள்...



**அன்புள்ள வாசகர்களுக்கு,**

தினமும் ஏழு இலட்சம் பள்ளி சிறுவர்களுக்கு சத்தான காலை சிற்றுண்டி வழங்கும் ஒரு மகத்தான திட்டத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்திருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் சிறுவர்கள் தினவிழா கொண்டாட்டத்தில் இந்த சிறுவர்களுக்கு காலை சிற்றுண்டி சிறப்பு நிகழ்வாக அமைந்து ஒரு பொருள் நிறைந்த கொண்டாட்டமாக மாறி உள்ளது.

குழந்தைகள் தினத்தன்று கலைநிகழ்ச்சிகளாலும், அவர்களின் பெருமைகளை பேசுவதாலும் மட்டுமே அவர்களை மகிழ்விப்பதோடு நின்றுவிடாமல், அவர்களின் அறிவு மற்றும் சிறந்த உடல்நலத்திற்கு காலை சிற்றுண்டி போன்ற திட்டங்கள் மூலம் நிலைத்தத்தன்மையை அடைவதற்கு வழிவகை செய்கிறது. இதுவே சிறுவர்களுக்கு முக்கியமான தேவையாக இருக்கிறது. இந்த வகையில் தமிழ்நாடு அரசுக்கு பாராட்டுதலை தெரிவித்துக்கொள்வோம்.

இன்றைய சூழல் சிறுவர்கள் செல்போனில் காலத்தை கழிப்பதை தடுப்பது, பரவி வரும் போதை பழக்கங்களில் இருந்து அவர்களை பாதுகாப்பது, பாலுணர்வை தூண்டும் இணையதளங்கள் மற்றும் சில சமூக ஊடகங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தாமல் இருப்பதை பார்த்துக்கொள்வது ஆகிய கடுமையான சவால்களை பெற்றோர்களும், கல்வி நிறுவனங்களும் எவ்வாறு எதிர்கொள்ள போகின்றனர் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.


இவர்கள் சிறுவர்கள்தானே என்று அலட்சியமாக இருந்துவிடாமல் அவர்களை கண்ணும் கருத்துமாக தொடர்ந்து கண்காணிக்க வேண்டியது சமுதாயத்தின் கடமையாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சிறுவர்களை பற்றி வேதாகமத்தில், "சிறுவர்களை கொடுமைப்படுத்துபவர்களின் கழுத்தில் இயந்திரகல்லை கட்டி கடலில் தள்ளுங்கள்" என்று கூறப்பட்டுள்ளது. இது சிறார்களின் மீது எந்த அளவிற்கு அக்கறை செலுத்த வேண்டும் என்பதை காட்டுகிறது.

யானை தனது குட்டிகளுக்கு வலிமையை கொடுப்பதற்காக அந்தக் குட்டிகளை புரட்டி புரட்டி அடிக்குமாம். அதனால் யானைக்கு தன் குட்டிகளின் மீது பாசமே இல்லை என்று புரிந்துகொள்ள கூடாது. ஐந்தறிவு உள்ள மிருகத்திற்கே அந்த புரிதல் இருக்கும் போது, பகுத்து அறியக்கூடிய மனிதர்களாகிய நாம் நமது குழந்தைகளை வளர்க்கும்போது பாசத்தை மனதில் வைத்து, செல்லம் கொடுப்பதை தவிர்த்து, நற்பழக்கங்களை பயிற்சிகளாகக் கொடுக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அதுவே சிறுவர்களை உண்மையாகக் கொண்டாடுவதாகும்.

இப்படிக்கு,
(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்



# உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155-ஆவது பிறந்தநாள் விழா



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 155-வது பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 02.10.2023 அன்று சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தி, சர்வோதயா சங்கத்தினர் நிகழ்த்திய நூற்புவேள்வி மற்றும் காந்திய இசை பாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், தலைமைச் செயலாளர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# உயர்நிலைக் குழுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 07.10.2023 அன்று தலைமைச் செயலகத்தில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் அனுமதி வழங்கிடும் உயர்நிலைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 04.10.2023 அன்று தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் இரண்டாவது நாளாக நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் நிறைவு உரையாற்றினார். இம்மாநாட்டில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விருதுகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 03.10.2023 அன்று தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட வனத்துறை அலுவலர்கள் மாநாட்டில், தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக சிறப்பான முறையில் பணியாற்றிய மாவட்ட ஆட்சியர்களை சிறப்பிக்கும் வகையில் 2022 ஆம் ஆண்டுக்கான பசுமை விருதுகளை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீபக் ஜேக்கப், இ.ஆ.ப., தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஆர்.வி. சஜீவனா, இ.ஆ.ப., கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., ஆகியோருக்கு வழங்கி சிறப்பித்தார். உடன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 04.10.2023 அன்று தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் 2023 ஆம் ஆண்டிற்கான நல்லாளுமை விருதுகளை திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., திண்டுக்கல் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச. விசாகன், இ.ஆ.ப., திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. வே.விஷ்ணு, இ.ஆ.ப., கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரும், நாகப்பட்டினம் மாவட்ட முன்னாள் ஆட்சித் தலைவருமான டாக்டர் அ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப., மற்றும் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த. பிரபுசங்கர், இ.ஆ.ப., ஆகியோருக்கு வழங்கி சிறப்பித்தார். உடன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அரசுத் துறைச் செயலாளர்கள் உள்ளனர்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 04.10.2023 அன்று தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் 2023-ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தமைக்கான விருதுகளை தஞ்சாவூர் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப., மற்றும் நாகப்பட்டினம் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவரும், தற்போதைய கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவருமான டாக்டர் அ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப., ஆகியோருக்கு வழங்கி சிறப்பித்தார். உடன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அரசுத் துறைச் செயலாளர்கள் உள்ளனர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 10.10.2023 அன்று சட்டமன்றப் பேரவையில் சட்டப் பேரவை விதி 110-ன் கீழ் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்.






# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 18.10.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்ட அரங்கில், "கள ஆய்வில் முதல்வர்" திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர. ராகுல்நாத், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. த. பிரபு சங்கர், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்த தொழிற் குழுவினர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை 17.10.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்ட அரங்கில், “கள ஆய்வில் முதல்வர்” திட்டத்தின் கீழ்நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் போது, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த திருத்தணி குறிஞ்சி செங்கல் சூளை குழு மற்றும் திருவள்ளூர் எம்ராய்டரி தொழில் குழுவினர் சந்தித்து, அரசு மானியம் வழங்கி தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியமைக்காக நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். இந்நிகழ்வின் போது, தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர. ராகுல்நாத், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. த. பிரபு சங்கர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



# துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

சென்னை, தலைமைச் செயலகத்தில், 12.10.2023 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள் தலைமையில், துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு.பா. பொன்னையா, இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / இயக்குநர் (பொது) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (பயிற்சி) திரு. ஹர் சஹே மீனா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சிறப்புச் செயலாளர் திரு. ஜெ.ஜெயகாந்தன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






# பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

தேனி மாவட்டம், முத்துதேவன்பட்டி வீட்டு வசதி சமுதாயக் கூடத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு துறைகளின் சார்பில் 2,813 பயனாளிகளுக்கு ரூ.21.83 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ.பெரியசாமி அவர்கள் முன்னிலையில் 25.10.2023 அன்று வழங்கினார்.



இவ்விழாவில், வருவாய்த்துறையின் சார்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ், 650 பயனாளிகளுக்கு ரூ.78.00 இலட்சம் மதிப்பீட்டில் மாதம் ரூ.1000/- பெறுவதற்கான ஆணைகள், மகளிர் திட்டத்தின் சார்பாக 1776 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.16.76 கோடி மதிப்பிலான வங்கி கடனுதவிகள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு ரூ.14.6 இலட்சம் கடனுதவி என மொத்தம் 2,813 பயனாளிகளுக்கு ரூ.21.83 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்

முன்னதாக மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தேனி மாவட்டம் லோயர் கேம்ப் பகுதியில் அமைந்துள்ள கர்னல் ஜான் பென்னிகுவிக் மணி மண்டபத்தில் உள்ள கர்னல் ஜான் பென்னிகுவிக் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மதி சிறுதானிய உணவகத்தை திறந்து வைத்து, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்வையிட்ட, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலக கூட்டரங்கில் மாவட்டத்தில் பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களின் செயல்பாடுகளையும் ஆய்வு செய்தார்.






இந்நிகழ்ச்சியில், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மரு. தரேஷ் அகமது, இ.ஆ.ப., தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.வி. ஷஜீவனா, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஜெயபாரதி, ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி மதுமதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பல்வேறு துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு துறை சார்ந்த வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோர் முன்னிலையில் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்டரங்கில் 26.10.2023 அன்று நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அரசு செயலர் மரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






## மகளிர் சுய உதவிக் குழுக்களின் கைவினைப் பொருட்கள் கண்காட்சி துவக்கம்


திருநெல்வேலி மாவட்ட வர்த்தக மையத்தில் 27.10.2023 அன்று நடைபெற்ற அரசு விழாவில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் அமைக்கப்பட்டிருந்த கைவினைப் பொருட்கள் கண்காட்சியினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் முன்னிலையில் துவக்கி வைத்தார். இந்நிகழ்வின் போது, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை செயலாளர் மரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.






## சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குவதில் சாதனை படைத்து வரும்
# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, பெண்களின் பொருளாதார சுய சார்பிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக சுயஉதவிக் குழுவினரின் தேவைகளை அறிந்து கடன்களை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

மகளிர் சுய உதவிக்குழுவினர் பணத்தை சிறப்பாக கையாளுவதைக் கண்ணுற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், வைக்க வேண்டிய இடத்தில் வைத்து, கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்து, பாதுகாக்க வேண்டிய இடத்தில் பாதுகாக்கும் அமைப்பாக இருப்பதால் தான் லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம் புழங்கும் இயக்கமாக மகளிர் சுய உதவிக்குழுக்கள் மாறியுள்ளன என்று பாராட்டியுள்ளார். இது சுயஉதவிக் குழுவின் பொருளாதார செயல்பாட்டிற்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாகும்.

கடந்த ஆண்டுகளில் சுயஉதவிக் குழுவினருக்கு ரூ.25,000 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ரூ.25,642.01 கோடி கடன் வழங்கி சாதனை படைக்கப்பட்டது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், 2023-2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.30,000 கோடி வங்கிக்கடன் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து,மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர்அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்அவர்களும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் அரசுநிகழ்ச்சிகளில் சுயஉதவிக் குழுவினருக்கு வங்கிக்கடன் இணைப்புகளை வழங்கி வருகின்றனர்.

31.01.2023 வரை 3,23,745 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 19,103.18 கோடி வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டினைப் போலவே இவ்வாண்டும் சுயஉதவிக் குழுவினருக்கு கடன் வழங்குவதில் சாதனை படைத்திட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



### சட்டம் என்ன சொல்கிறது?

# குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல் சட்டம் – 2005

ஒரு பெண் அவளது திருமண வீட்டில் வசிக்கும் உரிமையை இச்சட்டம் உறுதி செய்கிறது. "வன்முறையற்ற வீட்டில்" வாழ பெண்ணுக்கு பாதுகாப்பு அளித்திட கூடிய சிறப்பு அம்சங்கள் குறிப்பிட விதிகளின் கீழ் இச்சட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இந்தச் சட்டத்தில் உரிமைச் சார்ந்த மற்றும் குற்றம் சார்ந்த விதிகள் இருந்தாலும், பாதிக்கப்பட்ட பெண் 60 நாட்களுக்குள் உடனடியாக உரிமைச் சார்ந்த தீர்வுகளைப் பெற முடியும். பாதிக்கப்பட்ட பெண் தன்னுடன் குடும்ப உறவில் ஈடுபடும் எந்த ஆண் குற்றவாளி மீதும் இந்த சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யலாம். கணவன் அவரின் உறவினர்களையும் மற்றும் ஆண் துணைவன் ஆகியோரையும் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து தீர்வு காணலாம்.

### சட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

- பிரிவு 17ன் கீழ்வசிக்கும் உரிமையை உறுதி செய்கிறது.
- பொருளாதார வன்முறையை அங்கீகரிப்பதன் மூலம் பொருளாதார நிவாரணத்தை உறுதி செய்கிறது.
- வாய்மொழி மற்றும் உணர்ச்சி வன்முறையை அங்கீகரிக்கிறது.
- குழந்தையின் தற்காலிக பொறுப்பை வழங்குகிறது.
- வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட 60 நாட்களுக்குள் தீர்ப்புகள்.
- ஒரே வழக்கில் பல தீர்ப்புகள்.
- தரப்பினரிடையே மற்ற வழக்குகள் நிலுவையில் இருந்தாலும் இச்சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்படலாம்.
- மனுதாரர் மற்றும் பிரதிவாதி இருவரும் மேல்முறையீடு செய்யலாம்.

### குடும்ப வன்முறைச் சட்டம், 2005–லிருந்து பெண்களின் பாதுகாப்பின் கீழ்பின்வரும் தீர்வுகள் கிடைக்கின்றன

பிரிவு 18 - பாதுகாப்பு ஆணை

பிரிவு 19 - திருமணமான வீட்டில் வசிப்பதற்கான ஆணை

பிரிவு20 - தனக்கும் தன்னுடைய குழந்தைகளுக்கும் பராமரிப்பு உள்ளிட்ட பண ஆணைகள்

பிரிவு 21 - குழந்தைகளின் தற்காலிக பாதுகாப்பு

பிரிவு 22 -அவளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு ஆணை

### பாதுகாப்பு அலுவலர்கள்

குடும்ப வன்முறைச் சட்டம், 2005-ன் கீழ், பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் அல்லது குடும்ப வன்முறையில் ஈடுபட்ட மற்றும் மனுதாரருடன் குடும்ப உறவில் இருக்கும் ஆண்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்ய, அரசால் பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பெண்கள் நீதிமன்றத்தை அணுகி சட்ட உதவிகளைப் பெறவும், சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் உரிய நிவாரணம் பெறவும் பாதுகாப்பு அலுவலர்கள் உதவி செய்கின்றனர். மேலும், நீதிமன்றத்தின் உத்தரவுகளை காவல்துறையின் உதவியுடன் சம்மந்தப்பட்ட இடங்களில் நிறைவேற்றுகிறார்கள். பாதிக்கப்பட்ட நபர் முதன்மை நீதிமன்றத்தில் அல்லது சேவை வழங்குபவரிடம் அல்லது அருகிலுள்ள காவல் நிலையத்தில் மனுவை தாக்கல் செய்வதற்கான வழிவகை இச்சட்டத்தில் உள்ளது.

### சேவை வழங்குபவர்கள்

குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 இன் கீழ், அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் சேவை வழங்குபவர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி மற்றும் நிவாரணம் கிடைப்பதில் அனைத்து பங்குதாரர்களுடனும் ஒருங்கிணைத்து செயல்படுகின்றன. சேவை வழங்குநர்கள் பாதிக்கப்பட்ட பெண்கள் வன்முறை நடைபெற்ற அறிக்கையைத் தாக்கல் செய்யவும், அவர்களின் குழந்தைகளுடன் குறுகியகால தங்கும் இல்லங்களில் தங்குவதற்கும், அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும், தேவைப்பட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சை பெறுவதற்கும் உதவுகின்றன. அவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் நிலையான வருமானம் ஆகியவற்றைப் பெற உதவும் வகையில் அவர்களுக்கு தொழில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின்

# நவராத்திரி விற்பனைக் கண்காட்சி







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக்குழு மகளிரின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

சுய உதவிக்குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அளவில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு, சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சி, 07.10.2023 அன்று துவங்கியது.

2023 அக்டோபர் 07 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை நடைபெற்ற இக்கண்காட்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான சிறு தானியங்கள், செயற்கை ஆபரணங்கள், ஊறுகாய் வகைகள், வாழைநார் பொருட்கள், பாக்கு மட்டைப் பொருட்கள், சேலை வகைகள், பருத்தி மற்றும் பட்டுப் புடவைகள், பாரம்பரிய உணவுப் பொருட்கள், மண்பானைகள், கைவினைப் பொருட்கள், சிறுதானிய தின்பண்டங்கள், பனைஓலைப் பொருட்கள், பொம்மை வகைகள், மிளகு, மூலிகைப் பொருட்கள், பாரம்பரிய அரிசி வகைகள், பனைஓலைப் பொருட்கள், ஆடை வகைகள், தேங்காய் ஓடு பொம்மைகள், மரச்சிற்பங்கள், இயற்கை சோப் வகைகள், பழங்குடியினர் தயாரிப்புப் பொருட்கள், காகிதக் கூழ் பொம்மைகள், கோரைப்பாய், சிறுதானியங்கள், எண்ணெய் வகைகள், சணல் பொருட்கள், மெழுகுவர்த்திகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களும், குறிப்பாக நவராத்திரி கொலு பொம்மைகள் விற்பனை செய்யும் அரங்குகள் என 46 அரங்குகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் வழிகாட்டுதலில் செயல்படும் சுய உதவிக்குழுக்கள் மற்றும் திருநங்கையர் சுய உதவிக்குழுக்களும் இக்கண்காட்சியில் தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்தனர். பாரம்பரிய சுவைமிகுந்த சிறுதானிய உணவுகளை உண்டுகளித்திட 6 உணவு அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன.

இச்சிறப்புமிகு மகளிர் சுய உதவிக்குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சிக்கு ஏராளமான பொதுமக்கள் வருகை தந்து, மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரித்த தரமான பொருட்களை பெருமளவில் வாங்கிச் சென்றனர்.

# வீடுதோறும் மதி பொருட்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சாராஸ் கண்காட்சிகள், மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான கண்காட்சிகள், கல்லூரி மாணவ மாணவியர்களிடையே சுய உதவிக் குழுக்களின் பொருட்களை கொண்டு செல்லும் வகையில் கல்லூரி சந்தைகள் போன்ற நடவடிக்கைகள் மூலம் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.




சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் தரமாகவும், பயனுள்ளதாகவும் உள்ளதால் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், ‘தனக்கு அன்புபரிசாக சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களை வழங்க வேண்டும்’’ என கூறியது சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களின் தரத்திற்கு சான்றாகும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்துதலில் ஒரு பகுதியாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களின் ஆலோசனைப்படி மாதந்தோறும் வீட்டிற்குத் தேவைப்படும் மளிகை பொருட்களான பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள் போன்றவற்றை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் “வீடுதோறும் மதி பொருட்கள்”என்ற பெயரில் விற்பனை செய்திட திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் பொருட்கள் பட்டியலிடப்பட்டன,

அதனைத் தொடர்ந்து “வீடு தோறும் மதி பொருட்கள்”என்ற புதிய சந்தைப்படுத்துதல் உத்தியை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தலைமை அலுவலகத்தில் பிரத்யோக முறையில் செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், 13.10.2023 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு “வீடு தோறும் மதி பொருட்கள்” என்ற சந்தைப்படுத்துதலின் கீழ் மளிகைப் பொருட்களை வழங்கி விற்பனையைத் தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பொது மேலாளர் (பொ) திருமதி. ஜெயசுதா, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



# முதலமைச்சரின் காலை உணவு திட்டம் குறித்து ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டத்தில், 1,581 பள்ளிகளில் 88,988 மாணவ-மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்படி காலை உணவு வழங்கப்படுகிறது. மேலும், காலை உணவு முறையாக வழங்கப்படுகிறதா என தினமும் அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், உடையானந்தல் மற்றும் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம் செட்டிப்பட்டு கிராமங்களில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் 16.10.2023 அன்று காலை உணவு திட்டத்தை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா. முருகேஷ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு செய்து, காலை உணவை மாணவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டார்.



அதைத் தொடர்ந்து, காலை உணவு சமைக்கும் சமையல் அறைகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், "சமையல் அறைகளை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும், ஒவ்வொரு நாளும் காலை உணவு வழங்கும் நேரத்தில், ஏதேனும் ஒரு ஆசிரியர் சுழற்சி முறையில் பள்ளிக்கு முன்கூட்டியே வந்திருந்து மாணவர்களை கவனித்துக்கொள்ள வேண்டும்'' என்று கூறினார். இந்த ஆய்வின் போது, திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு. கணேஷ் மூர்த்தி, மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு. சையத் சுலைமான் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

# சமுதாய திறன் பள்ளி துவக்கம்

தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் சமுதாய திறன் பள்ளியை (CSS) 11.10.2023 அன்று வாடியூர் ஊராட்சியில் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. துரை ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நபார்டு வங்கியின் தமிழக முதன்மை பொது மேலாளர் திரு.சங்கர் நாராயண், தென்காசி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் அச்சு உபகரணங்களை வழங்கினர்.

இந்தசமுதாய திறன் பள்ளியில், சணல்பை தயாரிப்பு, ஸ்கிரீன் பிரிண்ட் பயிற்சி போன்றவை வழங்கப்பட உள்ளது. முதல் கட்டமாக 30 பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.





ரூ. 50,000/- மதிப்பிலான இலவசப் பயிற்சி! நிலையான வேலை!

கைநிறைய சம்பளம்! வேகமான முன்னேற்றம்!

# தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர் திறன் பயிற்சி திட்டம் (DDU-GKY)

தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர் திறன் பயிற்சி திட்டமானது ஊரகப்பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்கு பணியமர்வுடன் கூடிய தொழிற்பயிற்சிகளை அளிக்கின்றது. இத்திட்டத்திற்கு ஒன்றிய மற்றும் மாநில அரசால் 60:40 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### திட்டத்தின் பயனாளிகள்

- கிராம ஊராட்சிப் பகுதியில் வசிப்பவர்கள்
- 18 முதல் 35 வயதுள்ளவர்கள்
- வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் பிரிவைச் சார்ந்தவர்கள்

### சிறப்புப் பிரிவினர்

நலிவடைந்த பிரிவினருக்கு பயிற்சியில் கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மொத்த இலக்கில் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு 62, மலைவாழ் பிரிவினருக்கு 3 மற்றும் சிறுபான்மையினருக்கு 16 என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மகளிருக்கு 30 வரை பயிற்சி இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மேலும் 3 பயிற்சி இடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- இது தவிர மலைவாழ் மக்கள், நலிவுற்றோர் ஆகியோருக்கு அதிகபட்ச வயதுவரம்பு 35 லிருந்து 45 வரை தளர்த்தப்பட்டுள்ளது.

### பயிற்சிகள் விவரம்

செக்டார்ஸ்கில் கவுன்சில் (SSC) மற்றும் NCVT போன்ற அமைப்புகளின் மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ள 36 துறைகளில் பயிற்சி அளிக்கப்படும். குறிப்பாக சுகாதாரப் பராமரிப்பு (Health Care), தகவல் தொழில்நுட்ப சேவை (IT ITES), ஆடை வடிவமைப்பு (Apparel), கட்டுமானத் துறை, ஆட்டோமோடிவ், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் (Tourism Hospitality), சில்லரை வணிகம், தளவாடங்கள் (Logistics), அழகுக்கலை போன்ற எளிதில் வேலைவாய்ப்பு பெறும் துறைகளில் பெரும்பாலான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- பயிற்சியின் தரம் மற்றும் வேலைவாய்ப்பினை உறுதி செய்வதற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறை கையேடு கடைபிடிக்கப்படுகிறது.
- பயிற்சியின் போது, போக்குவரத்து, உணவு, தங்குமிடச் செலவு, சீருடை, பாடப்புத்தகங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

- பயிற்சியின் போது பணியிடைப் பயிற்சி மற்றும் மென்திறன் பயிற்சி வழங்கப்படும்.
- பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் இளைஞர்களுக்குத் தனியார் நிறுவனங்களில் குறைந்தபட்சம் ரூ. 8,000/- மாத வருவாயுடன் வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படுவதுடன், குறைந்தது ஓர் ஆண்டுகாலத்திற்கு பின் தொடர்பு மேற்கொள்ளப்படும்.

### பணியில் சேர்ந்த பிறகு

- சொந்த மாவட்டத்திலேயே பணிபுரிந்தால் மாதம் ரூ. 1000/- வீதம் 2 மாதங்களுக்கு ஊக்கத்தொகை பயனாளியின் வங்கிக் கணக்கில் வழங்கப்படும்.
- சொந்த மாவட்டம் தவிர்த்து மற்ற மாவட்டத்தில் பணிபுரிந்தால் ரூ. 1000/- வீதம் 3 மாதங்களுக்கு ஊக்கத் தொகை பயணாளியின் வங்கிக் கணக்கில் வழங்கப்படும்.
- பிற மாநிலங்களில் பணிபுரிந்தால் ஊக்கத் தொகையாக மாதம் ஒன்றிற்கு ரூ. 1,000/- வீதம் 6 மாதங்களுக்கு ரூ. 6,000/- வழங்கப்படும்.
- தொடர்ந்து பணிபுரியும் இளைஞர்களுக்கு மாதம் ரூ. 50/- வீதம் 12 மாதங்களுக்கு கைபேசி ரீசார்ஜ் செய்து தரப்படும்.
- நடப்பு நிதியாண்டில் (2023-24) 20,000 இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 9,450 இளைஞர்கள் பயிற்சி பெற்று பணிவாய்ப்பு பெற்றுள்ளனர்.

### அழைப்பு மையம்

தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி குறித்து சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும், கூடுதல் தகவல் பெறவும், தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர் திறன் பயிற்சித் திட்டத்திற்கென (DDU-GKY) பிரத்தியேக அழைப்பு மையம் (தொலைபேசி எண்: 155 330) உருவாக்கப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் இளைஞர் திறன் திருவிழாக்கள்:

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நேரடியாக வேலை தேடும் இளைஞர்களுக்கும், வேலைவாய்ப்பு அளிக்கும் நிறுவனங்களுக்கும்





இடையே தொடர்பு ஏற்படுத்திட மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மூலம் மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்படுகிறது.

அதேபோல், தகுதியான இளைஞர்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் திறன் பயிற்சியை தேர்வு செய்ய, இளைஞர் திறன் திருவிழாக்கள் நடத்தப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில் (2023-24) மாநிலம் முழுவதும் 100 இளைஞர் திறன் திருவிழா மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 14,556 இளைஞர்களுக்கு பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், 4959 இளைஞர்கள் பல்வேறு திறன் பயிற்சிகளில் சேர்ந்துள்ளனர்.

### ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் (RSETIs):

கிராமப்புற இளைஞர்களிடையே வேலையின்மையைக் குறைக்கும் நோக்கத்தோடு ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களுக்கு பயிற்சியளித்து சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தி அவர்களை தொழில் முனைவோராக உருவாக்கிட ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட முன்னோடி வங்கி மூலம் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (Rural Self Employment Training Institutes - RSETIs) அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற பயனாளிகள் சுய வேலைவாய்ப்பு மேற்கொள்ளவும், அதற்கான வங்கிக் கடன் மற்றும் பிற திட்ட உதவி பெறவும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் வழிகாட்டி வருகின்றன.

தற்போது தமிழ்நாட்டில் 33 ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் மாவட்டத்துக்கு ஒன்று வீதம் செயல்பட்டு வருகின்றன. புதியதாக துவங்கப்பட்டுள்ள மாவட்டங்களில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் 2023-24 ஆம் ஆண்டு முதல் செயல்பட அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் (2023-24) ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக மொத்தம் 25,000 இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு பயிற்சி வழங்கப்பட்டு, 13,500 இளைஞர்கள் சுய வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

# மகளிர் சுய உதவிக் குழுக்கள்
# உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மகளிர் சுய உதவிக்குழு பொருட்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திட பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த 40 ஆண்டுகளில் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களின் வாயிலாக மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்திட எடுக்கப்பட்ட பல்வேறு செயல்பாடுகள் வெற்றி பெற்று, தற்பொழுது வெளிசந்தைப்பொருட்களுக்கு இணையாக சந்தை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சந்தை வாய்ப்பிற்கான கீழ்கண்ட முயற்சிகளை முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறது.




### தேசிய அளவிலான கண்காட்சிகள்:

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை தமிழ்நாடு மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களில் விற்பனை செய்திட ஏதுவாகவும், மற்ற மாநிலங்களின் உற்பத்திப் பொருட்களைப் பற்றி அறிந்து கொள்ள ஏதுவாகவும் தேசிய அளவில் நடைபெறும் சாரஸ் கண்காட்சிகளில் ஆண்டிற்கு 100-க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்களைப் பங்கேற்கச் செய்து பயனடைய வைக்கிறது.



### மாநில அளவிலான கண்காட்சிகள்:

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்ய ஏதுவாக கண்காட்சி அரங்குடன் கட்டிடம் வடிவமைக்கப்பட்டு இக்கட்டிடத்திற்கு "அன்னை தெரசா மகளிர் வளாகம்" என முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010ல் பெயர் சூட்டப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்களை பெருமாநகராட்சியான சென்னையில் விற்பனை செய்திட வித்திட்டார். இந்த அரங்கத்தில் கோடைக் கொண்டாட்டம், பொங்கல் மற்றும் புத்தாண்டு, தீபாவளி மற்றும் நவராத்திரி என ஆண்டிற்கு மூன்று முறை கண்கட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.




### மதி அங்காடி:

மக்கள் அதிகம் கூடக்கூடிய இடங்களில் மகளிர் சுய உதவிக்குழுவினரின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்ய ஏதுவாக 154 மதி அங்காடிகள் அமைக்கப்பட்டு அவற்றில் மகளிர் சுய உதவிக்குழுவினரின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.



### கல்லூரி சந்தைகள்:

இளம் தலைமுறையினர் மத்தியில் மகளிர் தொழில் முனைவோர் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்களை பிரபலப்படுத்தும் வகையிலும், மேலாண்மை மற்றும் வணிகம் பயிலக்கூடிய இளைஞர்களின் தற்பொழுதைய திறன் மற்றும் தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொள்ள ஏதுவாகவும் வருடத்திற் குசுமார் 150 கல்லூரிகளில் கல்லூரிச் சந்தை என்ற பெயரில் குறைந்தபட்சம் 2 நாட்கள் அதிகபட்சம் 5 நாட்கள் என கண்காட்சிகள் நடத்தப்பட்டு மகளிர் சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.


# பெண்களை அதிகம் தாக்கும் இரத்த சோகை நோய்

நம் ரத்தத்தில் இருக்கும் சிவப்பு அணுக்களில் ஏற்படும் குறைபாடுகளையே இரத்த சோகை (Anemia) என்கிறோம். இன்னும் கொஞ்சம் விளக்கமாக சொன்னால், இந்த சிவப்பு அணுக்களில் ஹீமோகுளோபின் என்ற நிறமிகள் இருக்கின்றன. நம் உடலின் செயல்பாட்டுக்குத் தேவையான ஆக்சிஜனை திசுக்களுக்கு எடுத்துச் செல்வது இந்த ஹீமோகுளோபின்கள் தான். சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை குறைந்து, அதனால் ஹீமோகுளோபினின் செயல்பாடும் குறைந்து, அதனால் ஆக்சிஜன் எடுத்துச் செல்லப்படுவதும் தடைபடும் நிலையையே இரத்த சோகை என்கிறோம்.

வழக்கமாக ஹீமோகுளோபின் அளவு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என மூன்று தரப்புக்கும் சிறிது வித்தியாசப்படும். ஆண்களுக்கு சராசரியாக 14.5 முதல் 15.5 gm/dl, பெண்களுக்கு 13.5 முதல் 14.5 gm/dl இருக்க வேண்டும், குழந்தைகளுக்கு 16 முதல் 17 gm/dl என கொஞ்சம் அதிகமாக இருக்கும். (ஒரு லிட்டர் ரத்தத்தில் 10ல் ஒரு பாகத்தை எடுத்துக் கொண்டு, அதற்குள் எத்தனை கிராம் ஹீமோகுளோபின்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கிடுவார்கள்).

அதனால் தான் 10ல் ஒன்று என்ற அர்த்தத்தில் Grams per deci litre என்று கணக்கிடுகிறார்கள்.) இந்த ஹீமோகுளோபின் அளவு குறைவதை வைத்து இரத்தசோகை எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கலாம். ஹீமோகுளோபின் 10 முதல் 11 கிராம் இருந்தால் அது லேசான இரத்த சோகை, 9 முதல் 10 கிராமாக இருந்தால் அது மிதமான இரத்தசோகை, 8 கிராமுக்குக் கீழ் இருந்தால் அது தீவிர ரத்தசோகை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

விபத்து, அறுவை சிகிச்சை, புற்றுநோய் போன்றவற்றால் உண்டாகும் ரத்த இழப்புகள், இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம், பி12 போன்ற சத்துகள் கிடைக்காமல் போவது, பரம்பரை குறைபாடு, என்சைம்களில் ஏற்படும் கோளாறு, சிவப்பு அணுவின் அளவு குறைவது அல்லது வடிவம் மாறுவது, மலேரியா காய்ச்சல், ரத்தம் தானம் பெறும் போது இரத்தவகை மாறிப்போவது போன்ற காரணங்களால் ரத்தசோகை உருவாகலாம்.



இரும்புச்சத்து குறைபாடு காரணமாகவே பெரும்பாலானவர்கள் இரத்த சோகைக்கு ஆளாகிறார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லாத் தரப்பினருக்கும் இரத்தசோகை ஏற்படும் என்றாலும், பெண்கள்தான் இதில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். பருவம் அடைவது, மாதவிலக்கு, பிரசவம் போன்றவற்றால் பெண்கள் இயல்பாகவே அதிக இரத்த இழப்பை சந்திக்கிறார்கள். தாய்ப்பால் கொடுக்கிற பெண்களுக்கு தேவைக்கேற்ற இரும்புச்சத்து கிடைக்காத போதும் ரத்தசோகை ஏற்படுகிறது. இதனால் குழந்தைக்கும் போதுமான இரும்புச்சத்து கிடைக்காமல் போகும். அதனால், பெண்கள் கவனமாகத் தங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும். குடும்பத்தினரும் இந்த விஷயத்தில் பெண் குழந்தைகளின் மேல் கூடுதல் அக்கறை காட்டுவது நல்லது.

சோர்வு, தூக்கம் வருவது போன்ற உணர்வு, பசியின்மை, எந்த செயலிலும் ஆர்வத்தோடு ஈடுபட முடியாதது, மூச்சு வாங்குவது, நாக்கு, கண்களின் கீழ்பகுதி, மேலண்ணம் போன்ற இடங்கள் சிவந்த நிறத்தை இழந்து வெளுப்பாக மாறிவிடுவது, விரல் நகம் மேடாக இல்லாமல் தட்டையாக காட்சியளிப்பது போன்ற அறிகுறிகள் ரத்தசோகை இருப்பவர்களிடம் வெளிப்படையாகத் தெரியும். ரத்தசோகையின் இந்த அறிகுறிகள் தெரிந்தால் இரத்தப் பரிசோதனை நிலையத்தில் சென்று பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளலாம். காலையில் தான் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்பதோ, சாப்பிடுவதற்கு முன்பு தான் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்பதோ கிடையாது.

### எப்படி தவிர்ப்பது ?

எல்லாவற்றுக்கும் மேலாக சரிவிகித உணவு சாப்பிடுகிறவர்களுக்கு இரத்தசோகை வருவது இல்லை. கீரைவகைகள், முட்டை, பால், இறைச்சி, பேரீச்சம் பழம் போன்றவற்றை உணவில் தவறாமல் சேர்த்துக் கொள்வதன் மூலம் இரத்தசோகை ஏற்படாமல் தடுக்க முடியும். குறிப்பிட்ட வயதுக்கு மேல் ஜீரணசக்தி குறையும் போது மாத்திரை, ஊசி வழியாகவும் அந்த குறைபாட்டை சமன்படுத்த முடியும்.

# மும்பையின் கூலித் தொழிலாளி... கடலூரில்முதலாளிஆனகதை...

சுஜாதா. மும்பையில் சோ.ஃ.பாசெட் கடை ஒன்றில் கூலி வேலை பார்த்து வந்த இந்த ஏழைப் பெண், தற்போது தானே ஒரு சோ.ஃ.பா செட் கடை தொடங்கி ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் சம்பாதித்து முன்னுதாரணம் படைத்து வருகிறார்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டாரத்தில் உள்ள ஆயங்குடி ஊராட்சியை சேர்ந்த சுஜாதா, 2007-ஆம் ஆண்டு முதல் 15 ஆண்டுகளாக மும்பையில் உள்ள ஒரு சோ.ஃ.பா செட் கடையில் கூலித் தொழிலாளியாக வேலைபார்த்து வந்தார். இவரது கணவரும் அதே கடையில் கூலிவேலை பார்த்து வந்தார். குறைவான வருவாயில் இரண்டு குழந்தைகளை படிக்கவைக்க இவர்கள் மிகவும் சிரமப்பட்டனர்.

கொரோனா பெருந்தொற்று காரணமாக இவர்கள் வேலை பார்த்த சோ.ஃ.பாசெட் கடை மூடப்பட்டதால், 2020 ஏப்ரல் மாதம் இவர்கள் சொந்த ஊர் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வேறு வேலை எதுவும் தெரியாது என்பதால், தெரிந்தவர்களிடம் கடன் வாங்கி சோ.ஃ.பா செட் கடை ஒன்றை சிறிய அளவில் தொடங்கினார் சுஜாதா. இவரது கணவரும் உடன் இருந்து உதவினார். அது பெருந்தொற்று காலம் என்பதால் போதிய விற்பனை இல்லை. அதிக வட்டியில் வாங்கிய கடனுக்கு, வட்டிகட்ட முடியாமல் சிரமப்பட்டு வந்தனர். கடையை மூடிவிடுவதே நல்லது என்று சிந்திக்கும் அளவுக்கு பிரச்சினை பெரிதாகி வந்தது.



வாழ்க்கையில் அடுக்கடுக்காக வந்த சோதனைகளை எப்படி சமாளிப்பது என்று திணறிக் கொண்டிருந்த சுஜாதாவுக்கு, வீடு தேடி வந்த வரம் போல் அமைந்தது, அதே ஊரில் செயல்பட்டு வந்த செந்தாமரை சுய உதவிக்குழு. ஆம், 2020 அக்டோபரில், தங்கள் குழுவில் வந்து இணைந்து கொள்ளுமாறு, செந்தாமரை சுய உதவிக்குழு உறுப்பினர்கள் அழைப்பு விடுத்தபோது, தயக்கமின்றி அதில் உறுப்பினராக இணைந்து கொண்டார் சுஜாதா.

செந்தாமரை சுய உதவிக் குழுவில் இணைந்த அந்த நிமிடத்தில் தனது வாழ்க்கையில் பெரிய நம்பிக்கையை உணர்ந்ததாக கூறுகிறார் சுஜாதா. வாழ்க்கையில் தான் படும் அதே போன்ற சிரமங்களை எதிர்கொண்டு போராடி முன்னேறும் சகோதரிகளோடு மனம் விட்டுப் பேசியபோது, அதுவரை இல்லாத புத்துணர்வை பெற்றதாக இவர் தெரிவித்தார். வாராந்திர சிறு சேமிப்பு, அதிக வட்டி கடன்களை முற்றிலும் தவிர்ப்பது, குறைந்த வட்டியில் குழு கடன் பெற்று அதனை முறையாக திரும்பிச் செலுத்தி தொழிலில் முன்னேறுவது என்ற நிதி மேலாண்மையின் அடைப்படை விதிகளை செந்தாமரை சுய உதவிக் குழுவில் கற்றுக் கொண்டார் சுஜாதா.

இதனைத் தொடர்ந்து சுஜாதாவின் சோ.ஃ.பாசெட் கடை விரிவாக்கத்துக்கு உதவிகள் தேடி வந்தன. மகளிர் திட்டத்தின் உதவியுடன் இந்தியன் வங்கி ஆயங்குடி கிளையில் மிககுறைந்த வட்டியில் 50,000/- ரூபாய் கடன் உதவி தேடி வந்தது.

வீடு தேடி வந்த நிதியை சிந்தாமல் சிதறாமல் தொழில் விரிவாக்கத்துக்கு பயன்படுத்திக் கொண்டார். கடைக்குத் தேவையான கருவிகளை வாங்கி, பணியாட்களை நியமித்து, தரமான மூலப்பொருட்களை சென்னையில் இருந்து வரவைத்து, கண்கவரும் வகையிலான சோ.ஃ.பாசெட்களை உருவாக்கி விற்பனை செய்து வருகிறார்.

கடையின் தோற்றத்தை உயர்த்தி, உள்ளூர் விற்பனையை அதிகரித்திருப்பதுடன், சுற்றியுள்ள பெரிய நகரங்களிலும் ஆர்டர் பிடித்து விற்பனை செய்து வருகிறார். கதவுகள், ஜன்னல்களுக்கான அலங்கார திரைச் சீலை விற்பனையிலும் சக்கைபோடு போட்டு வருகிறார்.

குறைந்த வட்டியில் கிடைத்த கடனுதவி, 20 ஆண்டு கால அனுபவம், அயராத உழைப்பு இவற்றின் காரணமாக, தற்போது ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான லாபம் ஈட்டி வருகிறார். வாங்கிய கடனை முறையாக திருப்பிச் செலுத்தி வருவதால், தொழிலை மேலும் விரிவாக்கம் செய்ய கூடுதல் கடனுதவி அளிக்க வங்கி தயாராகி இருப்பதாகவும் கூறுகிறார் சுஜாதா.

"மும்பையில் ஒரு கூலித் தொழிலாளியாக வறுமையுடன் போராடி வந்த என்னை, இன்று ஓர் மதிப்புமிக்க தொழில் முனைவோராக தலைநிமிர்ந்து வாழ வைத்திருக்கும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு நான் வாழ்நாள் முழுவதும் நன்றிக்கடன்பட்டிருக்கிறேன்." என்று நெகிழ்ச்சியோடு பேசுகிறார் சுஜாதா.

## ஒருங்கிணைந்து சாதித்த பெண்கள்



சிவகங்கை மாவட்டம், கல்லல் ஒன்றியம், அரண்மனைப்பட்டி ஊராட்சியில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து "பட்டை வயர்கூடை வாழ்வாதார தொழில் மையமாக" செயல்பட்டு வருகின்றனர். செட்டிநாடு வயர் கூடைமிகவும் பிரபலமான ஒன்று என்பதால், ஏற்கனவே இந்த தொழிலில் அனுபவம் மிக்க சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த 30 உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் தலா ரூ.50,000/- வீதம் மொத்தம் ரூ.4.50/- இலட்சம் கடன் தொகையாக பெற்று, தேவையான மூலப்பொருட்கள் கொள்முதல் செய்து பட்டை வயர் கூடைகள் தயார் செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

30 நபர்கள் பல்வேறு வடிவங்கள் மற்றும் வண்ணங்களில் தேவையின் அடிப்படையில் கூடைகள் செய்து வருகின்றனர். உள்ளூர் வியாபாரிகள் மற்றும் வட மாநிலங்களுக்கும் ஆர்டரின் பேரில் தயார் செய்து விற்பனை செய்வதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 300/- முதல் ரூ. 500/- வரை வருமானம் ஈட்டி வருகின்றனர். வீட்டிலிருந்தே இத்தொழிலை செய்வதால் வருமானத்துடன் குழந்தைகள் மற்றும் குடும்பத்தையும் கவனித்துக் கொள்கின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் கண்டனூர், காளையார் கோவில், அ.சிறுவயல் மற்றும் நரியங்குடி போன்ற பகுதிகளில் செயல்படும் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்களும் வாழ்வாதார தொழில் மையங்களை அமைத்து பட்டைவயர் கூடைகளை தயார் செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

## பொருளாதார வளர்ச்சி தந்த பானிபூரி தொழில்

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியத்திலுள்ள ஆண்டியப்பனூர் ஊராட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் முல்லை மகளிர் சுய உதவிக் குழுவில் 12 உறுப்பினர்கள் உள்ளனர். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து ரூ.50 ஆயிரம் மற்றும் வங்கிக்கடன் ரூ.5 இலட்சம் பெற்று இந்தக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஆயத்த பானிபூரி தயாரித்து, முறையாக பேக்கிங் செய்து, கடைக்களுக்கு மொத்தமாக விற்பனை செய்து வருகின்றனர். குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் குழுவாக இணைந்து செய்வதனால் நாள் ஒன்றிக்கு குறைந்தபட்சம் 100 முதல் 150 பாக்கெட்டுகள் வரை தயார் செய்ய முடிகிறது. ஒரு பாக்கெட் விற்பனை விலையாக ரூ.70/- நிர்ணயித்து விற்பனை செய்வதன் மூலம் தயாரிப்பு செலவு போக ஒவ்வொரு உறுப்பினருக்கும் மாத வருமானமாக ரூ.11,000/- வரை கிடைக்கிறது. தங்களை தொழில் முனைவோராக உருமாற்றிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு முல்லை மகளிர் சுய உதவிக்குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



## முன்னேற்றம் தந்த மகளிர் திட்டம்



விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஊராட்சி ஒன்றியம், பெரியதச்சூர் ஊராட்சியில் வசிக்கும் எம். சக்திதேவி, க/பெ.முருகன் ஆகிய நான் 2001 ஆம் ஆண்டு MMM-VII என்ற குழுவினை ஆரம்பித்து செயல்படுத்தி வந்தேன். எங்கள் குழு உறுப்பினராக இணைந்துள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சமுதாய முதலீட்டு நிதியில் இருந்து 50 ஆயிரம் ரூபாய் கடன் பெற்று, ஒரு சிறிய பேக்கரி ஆரம்பித்து அதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு எனது குடும்பத்தின் பொருளாதாரத்தை முன்னேற்றி வருகிறேன். கிடைக்கும் இலாபத்தில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இருந்து பெற்ற கடனில் அசல் மற்றும் வட்டியினை முறையாக செலுத்தி வருகின்றேன்.மேலும் எனது பேக்கரியை விரிவுபடுத்திட வங்கியில் இருந்து நேரடிக் கடனாக 10 இலட்சம் ரூபாய் பெற்று, அந்தத் தொகையைக் கொண்டு, தற்போது நடத்தி வரும் பேக்கரியை விரிவுபடுத்தி, பெரிய அளவில் நடத்தி வருகின்றேன். நான் தயாரிக்கும் பேக்கரி பெருட்களை எனது ஊராட்சியிலே விற்பனை செய்து வருவாய் பெற்று வருகிறேன். எனது வாழ்வாதார முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த மகளிர் திட்டத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- எம். சக்திதேவி

## இளைஞர் திறன் பயிற்சி தந்த பொருளாதார வளர்ச்சி

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், தொப்பம்பட்டி வட்டாரம், தாழையூத்து ஊராட்சி, மாரப்ப கவுண்டன் வலசு கிராமத்தில் வசித்து வரும் எனது பெயர் வே. கிருஷ்ணகுமார் (த/பெ. வேலுச்சாமி). என் தந்தை விவசாயக் கூலித் தொழிலாளி, என் தாயார் 100 நாள் வேலைத் திட்டத்தில் பணி செய்து வருகிறார். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த நான் பனிரெண்டாம் வகுப்புவரை படித்துவிட்டு மேற்படிப்பைத் தொடர இயலாத நிலையில் என்ன செய்வது என தவித்து கொண்டிருந்த எனக்கு தாழையூத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வழிகாட்டுதலில் தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டத்தின் (DDU-GKY) கீழ் திறன் பயிற்சி பயில ஒரு வாய்ப்பு கிடைத்தது.



DDU-GKY திட்டத்தின் வழிகாட்டுதலில் பழனி பாலமுருகன் கல்வி அறக்கட்டளை பயிற்சி நிறுவனத்தில் Wiremen Control Panel A/C Field Technician பயிற்சியில் சேர்ந்தேன். பயிற்சிக்குத் தேவையான பாடநூல்கள், குறிப்பேடுகள், சீருடைகள் என அனைத்துமே கட்டணம் இல்லாமல் வழங்கப்பட்டது. செயல்முறைப் பயிற்சி, Spoken English, ஆளுமை, தலைமைப் பண்புகள், கணினி ஆகிய பயிற்சிகள் என்னை ஆங்கிலத்தில் பேசவைத்தது எனச் சொன்னால் அதுமிகை ஆகாது.

பயிற்சிக்குப் பின் நான் கோயம்புத்தூரில் உள்ள Aquasub Engineering என்ற நிறுவனத்தில் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு, ரூ.12,700/- மாத ஊதியம் பெற்று பணிபுரிந்து வருகின்றேன். இதன் மூலம் எனது வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்து வருகிறது என்பதை சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

எனக்கு தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டத்தின் (DDU-GKY) கீழ் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பும் பெற்றுத் தந்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளைக் கூற கடமைப்பட்டுள்ளேன்.

- வே. கிருஷ்ணகுமார்

## வணிகம் வளர்க...

# செங்கல்பட்டு மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம்

| சுய உதவிக் குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | |
|---|---|---|
| சம்பா மகளிர் சுய உதவிக்குழு<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br>கைபேசி : *91502 82418* | ராகி மற்றும் தினை தின்பண்டங்கள் |  |
| அமுதசுரபி மகளிர் சுய உதவிக்குழு,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br>கைபேசி : *96001 13033* | சிறுதானிய சத்துமாவு |  |
| பாரேரி கைவினை மகளிர் சுய உதவிக்குழு,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br>கைபேசி : *94861 40941* | காகிதக்கூழ் பொம்மைகள் |  |
| அக்னி சிறகுகள் மகளிர் சுய உதவிக்குழு,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br>கைபேசி : *74187 18010* | சாவிக் கொத்துகள் |  |

## வாழ்வாதார வளர்ச்சி தந்த இயக்கம்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, வார்டு எண்-10, வி.நகரில் வசித்து வரும் எனது பெயர் செல்வராணி (வயது 47), எனது குடும்ப பிரச்சனையின் காரணமாக என்னையும் (இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள்) என் குழந்தைகளையும் என் கணவர் விட்டு சென்று 8 வருடங்களாகிறது. நான் மூன்று குழந்தைகளையும் வைத்துகொண்டு எப்படி வாழ்க்கை நடத்தப் போகிறோம் என்று என்ன செய்வது அறியாமல் மிகவும் வேதனையுடன் இருந்தேன். எங்களுக்கு என் பெற்றோர் மற்றும் உடன் பிறந்தவர்கள் அவ்வப்போது அவர்களால் முடிந்த உதவிகளை செய்தனர்.



சாப்பாட்டிற்கே வழியில்லாமல் வீட்டு வேலைக்கு சென்று அதன் மூலம் கிடைத்த வருவாயில் தான் என் குழந்தைகளும் நானும் வாழ்ந்து வந்தோம். ஒரு நாள் இராசிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய அமைப்பாளர் என்னிடம் வந்து "நீ மகளிர் குழுவில் இணைந்துக் கொண்டால் உன் எதிர் காலம் நன்றாக இருக்கும், உன்னை மகளிர் குழுவில் இணைப்பதற்கு நான் உதவுகிறேன், உன்னால் முடிந்த சேமிப்பு செலுத்தி அதில் சிறு கடன் பெறலாம்" என்று சொன்னார்.

அதனைத் தொடர்ந்து, 5 உறுப்பினர்களைக் கொண்டு "எல்லை மாரியம்மன் சிறப்புக் குழு" என்ற பெயரில் குழு துவக்கி, இராசிபுரத்தில் உள்ள கனரா வங்கியில் கணக்கு துவங்கி குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் சேமிக்கத் தொடங்கினோம்.

குழு ஆரம்பித்த ஆறு மாதம் முடிந்தபிறகு ரூ. 1,20,000/- கனரா வங்கியில் கடன் வாங்கினோம். அதில் எனக்கு ரூ.24,000/-ம் கிடைத்தது. இந்தப் பணத்தைக் கொண்டு சிறுதானியங்களை வாங்கி வந்து உணவு பாதுகாப்புதுறையின் அங்கீகாரம் பெற்று சத்துமாவு அரைத்து, வீடு வீடாகச் சென்று, விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் எனது குடும்பத்தின் வறுமையை போக்கி வந்தேன்.

மேலும், நான் தயாரிக்கும் சத்துமாவு தரமாக இருப்பதால் அதிகம் விற்பனையாகத் தொடங்கியது. அதனால் சுய உதவிக் குழுவில் சிறுகடன் பெற்று சிறுதானியம் அரைக்கும் இயந்திரம் வாங்கினேன். கம்பு, சோளம், பாசிப்பயிறு போன்ற சிறு தானியங்களும் மற்றும் முந்திரி, பாதாம் போன்ற பருப்பு வகைகளும், வாசனைக்கான ஏலக்காயும் சேர்த்து சத்துமாவு தயாரித்து அதற்கு S.S.T. சத்துமாவு என்று பெயர் வைத்தேன். 500 கிராம் கொண்ட சத்துமாவின் அடக்கவிலை ரூ.120/- ஆகிறது. ரூ.140/-க்கு விற்பனை செய்து வருகிறேன். இதன் மூலம் எனக்கு மாதம் ரூ.10,000/- முதல் ரூ.15,000/- வரை வருமானம் கிடைக்கிறது.

எங்கள் மகளிர் குழுவை சுயம்பு பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைத்துள்ளோம். மேலும், தொழிலை விரிவுபடுத்தும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் PMFME திட்டத்தில் ரூ.40,000/-ம் ஆதார நிதியாக பெற்று, எனது தொழிலை மேலும் விரிவுபடுத்தியுள்ளேன்.

என்னுடைய வாழ்வாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- செல்வராணி, எல்லை மாரியம்மன் சிறப்புக் குழு, இராசிபுரம், நாமக்கல் மாவட்டம்.

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு மனமார்ந்த நன்றி...

கரூர் மாவட்டம், உப்பிடமங்கலம் பேரூராட்சியில் செயல்பட்டு வரும் சக்திமகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிகரமான செயல்பாடு குறித்து அக்குழுவின் உறுப்பினர்கள் கூறுவதை கேட்போம் வாருங்கள்.

''நாங்கள் அனைவரும் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்தி வந்தோம். எங்கள் வாழ்க்கையில் ஒரு ரூபாய் சேமிப்பு கூட இல்லாமல் ஒரு சிறு தேவைக்கு கூட பிறரிடம் கடன் கேட்கும் மோசமான நிலையில் இருந்தோம். இதனால் எங்கள் குழந்தைகளின் எதிர்காலம் மிகவும் கேள்விக்குறியாக இருந்தது. வங்கி கணக்கு ஆரம்பிக்காமலும் வரவு, செலவு மேற்கொள்ளாமல் இருந்ததால் வங்கி கடன் பெறுவதற்கும் வழிஇல்லை. இதனால் எங்களது அன்றாட வாழ்க்கை மிகவும் சிரமமாகவும், அச்சமாகவும் இருந்தது. அந்த சமயத்தில் எங்கள் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் மகளிர் சுய உதவிக்குழு ஆரம்பிப்பது தொடர்பாக சமுதாய அமைப்பாளர் ஒருவர் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்தத்திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மகளிரை இணைத்து குழு ஆரம்பிப்பது தொடர்பாகவும், அவர்களுக்கு குழு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர் பயிற்சி அளிப்பதாகவும் மேலும் சுய உதவிக் குழுக்களின் பயன்கள் பற்றியும் அதற்காக அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் வட்டி மானியம் மற்றும் இதர சலுகைகள் பற்றி அவர் தெளிவாக எடுத்துரைத்தார். இதற்கு பின்னர் எங்கள் பகுதியில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 12 மகளிரை இணைத்து சக்தி மகளிர் சுய உதவிக்குழுவை ஆரம்பித்தோம்.

எங்கள் குழுவிற்கான சேமிப்பு கணக்கை நாங்கள் வசிக்கும் பகுதியில் அருகாமையில் உள்ள வங்கியில் தொடங்கினோம். பிறகு ஒவ்வொரு மாதமும் தவறாமல் சேமிப்பு மற்றும் உள்கடன் அசல் ஆகியவற்றை செலுத்தி குழுவை நல்ல முறையில் நடத்தி வந்தோம். பிறகு இத்திட்டத்தின் கீழ் வட்டி மானியத்துடன் தொழில் கடனாக வங்கியில் ரூ. 10,00,000/- பெற்றோம். இதன் மூலமாக நாங்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து எங்கள் வீடுகளில் கை முறுக்கு, அதிரசம் போன்ற இனிப்பு மற்றும் கார வகைகளை தயாரித்து விற்பனை செய்து வருகிறோம்.

இந்த தொழிலில் எங்களுக்கு கணிசமான வருமானம் கிடைக்கிறது. எங்கள் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் இந்த தொழிலில் ஈடுபடுவதால் நாங்கள் பெற்ற வங்கிக் கடனை தவணை தவறாமல் செலுத்தி வருகிறோம். இதற்கு முன்னர் நாங்கள் அதிக வட்டிக்கு நுண்கடன் மற்றும் தனியார் கடன் நிறுவனங்களிடம் இருந்து கடன் தொகை பெற்று அதை திரும்ப செலுத்துவதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தோம். இத்திட்டத்தின் மூலம் நேரடியாக வங்கி கடன் பெற்றதால் எங்களுக்கு வட்டி மானியத்துடன் கடன் பெற முடிந்தது. இதனால் எங்களின் இலாபமும் அதிகரித்தது. மாதந்தோறும் எங்களுக்கு ரூ.50,000/- வரை வருமானம் கிடைக்கிறது. இதனால் நாங்கள் சிரமம் இன்றி வாழ்க்கை நடத்துவதற்கு வசதியாக உள்ளது.

நாங்கள் பெற்ற வங்கி கடனில் தற்போது சிறிய அளவில் இதுபோன்ற இனிப்பு மற்றும் கார வகைகள் செய்து வருகிறோம். விரைவில் இந்த வங்கிக் கடனை முடித்து விட்டு மேலும் எங்கள் தொழிலை விரிவுப்படுத்த வங்கியில் அதிகக் கடன் பெற்று அடுமனை ஒன்றை நாங்கள் அனைவரும் சேர்ந்து ஆரம்பிக்க முடிவு செய்து உள்ளோம். எங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட காரணமாக இருந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.



## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.

வாழ்வாதார உதவி அழைப்பு எண்

# 155 330

**LIVELIHOOD HELPLINE NUMBER**

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.




**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**

அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,

நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ugkytn2016@gmail.com

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

# ஒரு வெல்டிங் பயிற்றுநராக சாதித்து தொழிலை விரிவாக்கி நல்ல வருவாயை ஈட்டுகிறேன்!

எனது பெயர் கார்த்திகேய ராஜா, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, சூரக்குளம்பில்லருத்தான் கிராம ஊராட்சியில் கடந்த 10 ஆண்டுகளாக சிறிய வெல்டிங் இயந்திரத்தை வைத்து வெல்டிங் கடையை நடத்திக் கொண்டிருந்தேன். 2 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வழங்கிய சமுதாயத் திறன் பள்ளிப் பயிற்றுநர் வாய்ப்பைப் பெற்று பயனாளர்களுக்கு சால்டரிங் வேலையைக் கற்றுக் கொடுத்து வருகிறேன். எனது CSS பள்ளியில் இருபதிருபது பயனாளர்களாக பயிற்சி பெற்று வருகின்றனர். இரண்டு ஆண்டுகளாக பல்வேறு இளைஞர்களுக்கு பயிற்சியளித்து வரும் நான், சமீபமாக தற்பொழுது அளித்து வரும் பயிற்சியில் 15 பேர் பயின்று வருகின்றனர்.

என்னிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள் பயிற்சிக்கு முன்பு குறைந்த கூலியில் வேலை செய்து வந்தவர்களாகும். என்னிடம் பயிற்சிப் பெற்றவர்களில் 3 தொழிலாளர்கள் எனது நிறுவனத்திலேயே பணி செய்கின்றனர். 10 தொழிலாளர்கள் பிற நிறுவனங்களில் நாள் ஒன்றுக்கு ரூ.550/- முதல் ரூ.660/- வரையிலான கூலிக்கு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.இரண்டு பயனாளர்கள் அவர்களின் சொந்த முதலீட்டில் தொழிலைத் தொடங்கி நடத்தி வருகின்றனர்.மற்றொரு பயனாளர் VKP திட்டத்தின் இணை மானிய நிதி ரூ. 1,65,000/- பெற்று அவரது சொந்தக் கடையை தொடங்கியுள்ளார். மேலும் எனது பயிற்சியாளர்கள் பயிற்சியின் போது தற்காலிக வேலை வாய்ப்புகளைப் பெறுவதுடன் அவர்களின் அண்டை வீட்டாரிடமிருந்து பழுதுபார்க்கும் பணிகளையும் எடுத்துச் செய்கின்றனர். இதுதவிர என்னிடம் பயின்ற பல பயிற்சியாளர்கள் உள்ளூர் வெல்டிங் நிறுவனங்களில் உதவியாளர்களாக பணிபுரிவதுடன் உள்ளூர் வேலைகளையும் எடுத்து நாள் ஒன்றுக்கு ரூ. 2,000/- வரை வருவாய் ஈட்டுகின்றனர்.

இவர்களில் சிலர் வாடகைக்கு வெல்டிங் இயந்திரங்களை பெற்று வேலை செய்கின்றனர். இன்னும் இருவர் சொந்தமாக சிறிய வெல்டிங் இயந்திரம் வாங்கியுள்ளனர். நான் பயிற்றுநராக மாறியதால் எனது திறனறிவை நான் மென்மேலும் உயர்த்திக்கொண்டேன்.திட்டத்தின் மூலம் MGP கடனாக ரூ.5 இலட்சம் பெற்றுப் பயனடைந்துள்ளேன்.

மேலும் நான், பிற மாவட்டங்களைச் சேர்ந்த 20 பயிற்சியாளர்களுடன் ஐஐடி மெட்ராஸில் ஃபேப்ரிகேஷன் குறித்த ஒரு பட்டறை பயிலரங்கிலும் கலந்து கொண்டேன். அங்கு புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் ஆற்றல் பற்றியும் அறிந்து கொண்டேன். இந்த கூடுதல் திறன் வளர்ச்சியின் மூலம் என்னால் கூடுதல் வருமானம் ஈட்ட முடிகிறது. எனது மாத வருமானம் இப்போது ரூ.40,000/- முதல் ரூ. 50,000/- ஆக உயர்ந்துள்ளது. எனது சமீபத்திய வகுப்பில், இரண்டு பெண்களுக்கு பயிற்சியளித்தேன், அவர்கள் தங்கள் கணவர்கள் செய்யும் வெல்டிங் தொழிலுக்கு உதவி செய்து வருகின்றனர். இவ்வாறாக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் என் வாழ்வின் தரமும், வருவாய் வளமும் மேம்பட்டுள்ளது.



# ஆசிரியையாக இருந்து தொழில் தடைப்பட்டது, தேனீ வளர்ப்பில் புதிய வளம் கிடைத்தது!

விருதுநகர்மாவட்டம்,இராஜபாளையம்வட்டாரம்,சோலைச்சேரி ஊராட்சியில் வசித்து வரும் என் பெயர் ஞானப்பிரியா. B.Ed., படிப்பினை முடித்துள்ள, நான் ஒரு பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்தேன். கோவிட் பெருந்தொற்றின் பொழுது பணியை விட்டு விலகினேன். கோவிட்டுக்குப் பிறகு அந்த ஆசிரியைப் பணியைத் தொடர எனக்கு விருப்பமில்லை. எனது கணவர் குடும்பத்தினர் மூன்று தலைமுறைகளாக தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே எனது மாமனார் செய்து வரும் தேனீ வளர்ப்பு மற்றும் தேன் வணிகமான எங்களது குடும்பத் தொழிலில் இணைந்து கொண்டேன். எனது கணவர் எனக்கு தொழில் ஆதரவு கொடுப்பதுடன் வேறு வேலைக்கும் செல்கிறார்.

பெருந்தொற்று காலத்தில் நாங்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்தோம், அதனால் சொந்தத் தொழிலைத் தொடங்கலாம் என்று தீர்மானித்தோம். அந்த நேரத்தில் நான் புத்தகப் பராமரிப்பாளராக வேலை செய்யும் எனது சுயஉதவிக் குழுவின் மூலம், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் இணை மானிய நிதி வழங்கப்படுவதை அறிந்து கொண்டேன். எனது சுய உதவிக் குழுவின் மூலம் கடன் பெற விண்ணப்பித்து வங்கிக் கடன் ரூ. 3 இலட்சமும், இணை மானிய நிதி 2,71,466/- ரூபாயும் பெற்றேன்.

எங்கள் குடும்பத்தினர் பண்ணையில் தேனை சேகரிப்பதுடன், எங்களது சுற்றுவட்டராத்தில் பிறரிடமிருந்தும் தேனை வாங்கி விற்பனைச் செய்கிறோம். இந்த தேன் 250 கிராம் ரூ.200/- முதல் ரூ. 600/- வரை விற்பனைச் செய்யப்படுகிறது. நாங்கள் ஒரு பருவத்திற்கு 50 முதல் 100 கிலோ வரை தேன் உற்பத்திச் செய்வோம். இந்தப் பருவத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை தேன் அறுவடை செய்யப்படுகிறது. மேலும் உள்ளூர் மலைவாழ் மக்களிடமிருந்தும் தேனை வாங்கி 'சோலைத் தேன்' என்ற வணிகப் பெயரில் உள்ளூர் பகுதிகளிலும், நந்தனம் கண்காட்சி மற்றும் விற்பனையின் போதும் விற்பனைச் செய்கின்றோம். இந்தத் தேன் வகைகளை சுத்திகரிப்பதற்கும், பாக்கெட் இடுவதற்கும் எனது சுய உதவிக் குழுவிலிருந்து 2 பணியாட்களை வேலைக்கு வைத்துள்ளோம். அவர்களுக்கு தினக்கூலியாக ஒரு நாளைக்கு 200/- ரூபாய் கொடுக்கிறோம். வேலை அதிகம் உள்ளபோது அதற்கேற்ற கூலியையும் கொடுக்கிறோம்.




நான் எனது குடும்பத்தினருடன் இணைந்து அனைத்து செலவுகளும் போக மாதம் ரூ.50,000/- முதல் ரூ.80,000/- வரை வருவாய் ஈட்டுகிறோம். எங்களது நிறுவனத்திற்காக GST சான்றை பெற விண்ணத்துள்ளோம், மேலும் இணைய வழியில் விற்பனைச் செய்யவும் திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறோம்.

- ஞானப்பிரியா

## பயிற்றுநரின் பயிற்சியும், ஒருங்கிணைந்த விவசாய முயற்சியும், அதிக வருவாயை வழங்கி வருகிறது!

திரு.கந்தசாமி அவர்கள் சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரத்திலுள்ள தும்பல்பட்டி ஊராட்சியின் பழங்குடி உழவர் ஆவார். தும்பல்பட்டி உழவர் உற்பத்தியாளர் குழுவில் உறுப்பினராக உள்ள இவர் தனது 3 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார். டிப்ளமோ வரை படித்துள்ள இவர், தனது நிலத்தில் கம்பையும், வரப்போரத்தில் சாமந்தி மலர்களையும் சாகுபடி செய்து, அதன் மூலம் பயிருக்கு பூச்சித் தாக்குதலையும் நோய்த்தொற்றையும் தடுத்து வருகிறார். இவர் இந்த இயற்கை விவசாயத்திற்காக KVK பயிற்சி நிறுவனத்தில் பயிர் மேலாண்மைக்கான பயிற்சியை எடுத்துக்கொண்டார். அதன் அடிப்படையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் பயிற்றுநராக (ஸ்பார்க்) தேர்வுச் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு சிறந்த இயற்கை விவசாய முறையையும், இயற்கை உள்ளீடுகளின் பயன்பாட்டையும் ஊக்குவித்து வருகிறார்.

பயிற்சியில் உழவர்களுக்கு ஒருங்கிணைந்த இயற்கை விவசாய முறையை ஊக்குவித்து மலர்கள் சாகுபடி (அரளி), சிறு தினை, ஆடு வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் தீவன வளர்ப்புப் போன்றவற்றை பயிற்றுவித்து வருகிறார். மேலும் இயற்கை உள்ளீடுகளை (உரங்களை) குறைந்த செலவில் தயாரித்து ஒரு ஏக்கருக்கு ரூ. 2,500/- அளவில், குறைந்த செலவில் அதிக மகசூலை ஈட்டும் வழிமுறையைப் பயிற்றுவித்து வருகிறார். இதில் விதையிட்டு 17 நாட்களில் வளர்ந்த பயிர்களை ஒரு சதுர மீட்டர் நிலத்தில் 46 நடவுகளை நடும் முறையையும் பயிற்றுவித்து வருகிறார்.

இவர் மகளிர் குழுக்களுக்கு தேனீ வளர்ப்பு குறித்தும் பயிற்சியை வழங்கி வருவதுடன், வயலில் தேனீ பொறிகளையும் பொருத்தி வருகிறார். மேற்கண்ட நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து இரண்டாவது ஆண்டு விவசாயத்தில் ரூ. 3 இலட்சம் வரை வருவாய் ஈட்டினார். மேலும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திலிருந்து ரூ. 5 இலட்சம் இணை மானிய நிதியைப் பெற்று ஆட்டுப் பண்ணையும் வைத்துள்ளார்.



# மசாலா இட்லி

குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் ஏற்ற ஒரு ஆரோக்கியமான உணவு என்றாலே எப்போதுமே இட்லி தான். உணவு. இந்த இட்லியை இன்னும் கூட கொஞ்சம் ருசியாகவும் ஆரோக்கியமாகவும் செய்து கொடுக்க முடியும். இதுவரையில் நாம் வெறும் இட்லி மட்டும் சாப்பிட்டிருப்போம். இப்போது இந்த இட்லியில் கொஞ்சம் காய்கறிகளும் சேர்த்து ஆரோக்கியமான மசாலா இட்லி குறித்து இப்போது தெரிந்து கொள்ளப் போகிறோம்.



இந்த இட்லி செய்வதற்கு முதலில் ஒரு கப் ரவை எடுத்துக் கொள்ளுங்கள். எந்த கப்பில் ரவை அளக்கிறீர்களோ அதே கப்பில் ஒரு கப் அளவிற்கு தயிர், அதே கப்பில் ஒரு கப் அளவிற்கு தண்ணீர் மூன்றையும் ஒன்றாக கலந்து, கால் டீஸ்பூன் உப்பு சேர்த்த பிறகு பத்து நிமிடம் மூடி வைத்து விடுங்கள். 10 நிமிடம் கழித்து இதில் கொஞ்சம் ஈனோ சேர்த்து அடித்து எடுத்து வைத்துக் கொண்டால் இட்லிக்கான மாவு தயார்.

இப்பொழுது இட்லிக்கு உள்ளே வைக்கும் மசாலாவை தயார் செய்து விடுவோம். இரண்டு உருளைக்கிழங்கை வேக வைத்து எடுத்து மசித்து கொள்ளுங்கள். அதில் ஒரு வெங்காயம், ஒரு பச்சை மிளகாய், கொஞ்சம் கருவேப்பிலை, கொத்தமல்லி என அனைத்தையும் நன்கு பொடியாக நறுக்கி சேர்த்து கொள்ளுங்கள். அத்துடன் அரை டீஸ்பூன் அளவிற்கு மிளகாய்த்தூள், கால் டீஸ்பூன் மஞ்சள்தூள், கால் டீஸ்பூன் உப்பு என அனைத்தையும் சேர்த்த பிறகு, அரை டீஸ்பூன் லெமன் ஜூஸ் சேர்ந்து இந்த மசாலாவை நன்றாக கலந்து சிறு சிறு உருண்டைகளாக செய்து எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இப்போது இட்லிக்கு உள்ளே வைக்கும் மசாலாவும் தயாராகி விட்டது. உங்களுக்கு தேவைப்பட்டால் உருளைக்கிழங்கோடு கேரட், பீன்ஸ் போன்ற காய்கறிகளை சின்ன சின்னதாக நறுக்கியும் சேர்த்துக் கொள்ளலாம்.

பத்து நிமிடம் கழித்து தயாராக இருக்கும் மாவை ஒரு முறை நன்றாக அடித்து எடுத்துக் கொள்ளுங்கள். இட்லி பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி இட்லி தட்டு வைத்து தண்ணீரை கொதிக்க விடுங்கள். நான்கு ஒரே அளவு உள்ள சின்ன கிண்ணங்கள் அல்லது டம்ளர் எடுத்துக் கொள்ளுங்கள். இந்த டம்ளரில் முதலில் லேசாக எண்ணெய் தடவி கொள்ளுங்கள். அதன் பிறகு, கரைத்து வைத்திருக்கும் மாவில் ஒரு கரண்டி மாவை ஊற்றிய பிறகு நீங்கள் உருட்டி வைத்திருக்கும் மசாலாவை வைத்து மேலும் ஒரு கரண்டி மாவை ஊற்றுங்கள். இதே முறையில் இட்லி தட்டில் கூட ஊற்றலாம். நீங்கள் கிண்ணங்களில் ஊற்றினாலும் சரி டம்பளர்களில் ஊற்றி வைத்தாலும் சரி, அதன் முக்கால் பாகம் வரை மாவு இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். இதை அப்படியே எடுத்து இட்லி பாத்திரத்தில் வைத்து வேக வைத்து எடுத்து விடுங்கள். வெந்த பிறகு சூடு ஆறியவுடன் எடுத்து ஒரு தட்டில் கவிழ்த்து தட்டினால் போதும். இட்லி அருமையாக ரெடி ஆகிவிடும். இதற்கு தனியாக சைட்டிஷ் எதுவும் தேவையில்லை இதில் உள்ளிருக்கும் மசாலாவே போதும். காலை பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் முதல் வீட்டில் இருக்கும் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற நல்ல ஒரு ஆரோக்கியமான உணவு இந்த மசாலா இட்லி. இதில் சேர்க்கும் காய்களை மட்டும் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப சேர்த்துக் கொள்ளுங்கள்.

## பயனுள்ள குறிப்புகள்

- காலி∴பிளவரை சமைக்கும் முன் வெந்நீரில் சர்க்கரை கலந்து வேக வைத்தால் காலி∴பிளவர், வெண்மையாக இருப்பதுடன் கண்ணுக்குத் தெரியாத புழுக்கள் அழிந்துவிடும்.
- தோசைக்கு, இட்லிக்கு மாவு அரைக்கும் போது ஒரு வெண்டைக்காய் சேர்த்து ஆட்டினால் தோசை, இட்லி பூ போல மிருதுவாக இருக்கும்.
- சாதம் மிஞ்சிவிட்டால், ஒரு பாத்திரத்தில் வெந்நீர் வைத்து சாதத்தை ஆவியில் சூடு பண்ணலாம். சாதம் கொதிக்கும்போது மிஞ்சிய சாதத்தையும் சேர்த்துப் போட்டு வைக்கலாம்.
- காய்ந்து போன ரொட்டித் துண்டுகளை இட்லி பாத்திரத்தில் ஆவியில் அவித்தால் புதியது போலாகி விடும்.
- கத்தியின் கூரிய பகுதியை உப்பில் அழுத்தி எடுத்தால் மீன், மாமிசம் இவற்றை சுலபமாக நறுக்கலாம்.
- வெங்காயம், பூண்டு இவற்றை இலகுவாக உரிக்க தண்ணீரில் போட்டு உரிக்கவும். கண்ணும் கரிக்காது.

திரு. **பா. பொன்னையா,** இ.ஆ.ப.,
உறுப்பினர் செயலர் / திட்ட இயக்குநர்

திருமதி. **க. முத்து மீனாள்,**
கூடுதல் இயக்குநர்

திரு. **இரா. இரவிச்சந்திரன்,**
தகவல் மற்றும் தொழில்நுட்ப மேலாளர்

# தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

## தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் மற்றும் இந்தியன் வங்கி இணைந்து நடத்திய மகளிர் சுய உதவிக் குழு கடன் மேளா



செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் வடநெம்மேலி கூட்டு வள மையத்திற்குட்பட்ட கே. ஆர்.குப்பம், முட்டுக்காடு, கோவளம், திருவிடந்தை, வடநெம்மேலி, நெம்மேலி மற்றும் பட்டிப்புலம் ஆகிய ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள், இந்தியன் வங்கி கோவளம் கிளையில் வணிக மேம்பாட்டு முகவராக செயல்பட்டு வருகின்றனர். கடந்த 10.10.2023 அன்று இத்திட்டத்தின் மூலம் கூட்டமைப்பில் உள்ள 46 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூபாய் 50,10,0000 கடன் தொகையினை செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். இவற்றின் மூலம் கூட்டமைப்புகளுக்கு வருமானம் பெறும் வகையிலும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தொழில் முன்னேற்றத்திற்கு இக்கடனை பெற்று தந்த தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினர் தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கடல் சிற்பி கூட்டுப்பொறுப்புக் குழுவின் மூலம் கருவாடு உற்பத்தி மற்றும் விற்பனை

நாகப்பட்டினம் மாவட்டம், திருப்பூண்டி கிழக்கு ஊராட்சியில் வசிக்கும் அஞ்சம்மாள், தையல்நாயகி, பூங்கொடி, சுதந்திரவள்ளி, லெட்சுமி ஆகிய நாங்கள் ஐவரும் இணைந்து 19.09.2020 அன்று கடல்சிற்பி கருவாடு உற்பத்தி என்ற கூட்டு பொறுப்புக்குழுவை உருவாக்கி ஒற்றுமையுடன் செயல்பட்டு, கருவாடு உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் மூலம் இந்தியன் வங்கி, வேளாங்கன்னி கிளையில் ரூ.2,00,000/- கடன் பெற்று, அத்தொகையினை நாங்கள் ஐந்து பேரும் தலா ரூ.40,000/- வீதம் பிரித்து, மீன் கொள்முதல் செய்து கருவாடு உற்பத்தி செய்து வருகிறோம்.

சராசரியாக 1 நபர் ரூ.2000/- முதல் ரூ.5000/-வரை மீன் கொள்முதல் செய்து, இதிலிருந்த கருவாடு தயாரித்து ரூ.3000/- முதல் ரூ.6000/- வரை விற்பனை செய்கின்றனர். ஒரு நாளைக்கு ரூ.300/- வரை ஒரு நபருக்கு இலாபம் கிடைக்கின்றது. இந்த வருமானத்தை கொண்டு தவணை தவறாமல் கடன் தொகையை முழுவதுமாக திரும்ப செலுத்தி, மீண்டும் ரூ.3,00,000/-கடன் தொகை பெற்று, திரும்பச் செலுத்தி வருகிறோம். இந்தக் கடனை செலுத்தி முடித்தவுடன் 3வது கடனாக ஒரு நபருக்கு



ரூ. 1 லட்சம் வீதம் கடன் தருவதாக வங்கி மேலாளர் கூறியுள்ளார். கூலி தொழிலாளியாக வேலை செய்து வந்த எங்களை உரிமையாளராக மாற்றி எங்களது வாழ்வாதாரத்தை உயர்த்திய தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம் என கூட்டுப் பொறுப்புக் குழு திட்டத்தின் மூலம் கடன் பெற்றுவாழ்வாதாரம் பெற்றபயனாளிகள் கூறுகின்றனர்.

## ஸ்ரீ பாஞ்சாலி மலர்கள் சாகுபடி கூட்டுப் பொறுப்புக் குழு



நாகப்பட்டினம் மாவட்டம், கோவில்பத்து ஊராட்சியில் செயல்பட்டு வரும் மருவரசி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ள ஏழைக் குடும்பத்தை சேர்ந்த 5 நபர்கள் ஒன்றிணைந்து ஸ்ரீ பாஞ்சாலி மலர்கள் சாகுபடி கூட்டுப் பொறுப்புக் குழுஅமைத்து, 31.12.2021ல் கள்ளிமேடு இந்தியன் வங்கியில் ரூ.2,50,000/- கடன் பெற்று ஒவ்வொரு உறுப்பினரும் 50 முதல் 75 மலர் சாகுபடி செடிகளை நடவு செய்து பராமரித்து வருகிறார்கள். ஒரு நாளைக்கு 3 மணி நேரம் மட்டுமே மலர்கள் சேகரிக்கும் வேலைகள் செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் கடன் தொகை ரூ.1,50,418/- திரும்ப செலுத்தியதுடன் தங்களின் குடும்ப செலவினங்கள், குழந்தைகள் படிப்பு மற்றும் இதர செலவினங்களுக்கு இத்தொழில் மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து செலவு செய்து வருகிறார்கள்.

உடனடி வருமானம் ஈட்டக் கூடிய தொழிலான மலர்கள் சாகுபடி பயிரிட்டு, மலர்களை நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யத்தைச் சேர்ந்த முகவர்களிடம் விற்பனை செய்து, ஒரு நாளைக்கு ஒரு உறுப்பினர் 1.5 கிலோ முதல் 3 கிலோ வரை மலர்களை விற்பனை செய்வதன் மூலம் ரூ.300/-வரையும்,விசேஷ காலங்களில் ரூ.1,200/- வரை விற்பனை செய்து வருவாய் பெற்று வருகிறார்கள். ஒருமுறை நடும் மலர் செடிகளை 2 மாதத்திற்கு ஒருமுறை கலப்பு உரங்களை வைத்தும், வருடத்திற்கு ஒருமுறை செடிகளை வெட்டிவிட்டு பராமரித்தும் வருவதால் பல ஆண்டுகள் மலர்களை சேகரித்து வருமானம் ஈட்டி தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளனர்.

## தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தின் வருவாய் ஈட்டு கடன் திட்டத்தின் மூல பல்பொருள் அங்காடி நடத்தி வரும் பயனாளி



விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் செயல்படும் கூனிமேடு ஊராட்சியில் வசிக்கும் திருமதி. பிரித்தா (க/பெ. ராஜா) அப்பகுதியில் செயல்படும் ரோஜா சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளமையால் வருவாய் ஈட்டும் தொழில் கடன் பெற்று பல்பொருள் அங்காடி நடத்தி வருகின்றார்.

தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கத்தில் சிறப்பு பயனாளிக்கு தொழில் மேம்பாட்டிற்காக பயனாளி விளிம்பு தொகை ரூ.2,000/-மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக ரூ.18,000/- என மொத்தம் ரூ.20,000/- கடன் வழங்குவதை அறிந்து கூட்டமைப்பை அணுகி கடன் பெற்றார்.

இக்கடன் தொகையை பெற்ற திருமதி. பிரித்தா, தனது கடைக்குத் தேவையான பொருட்களை அருகில் உள்ள புதுச்சேரியிலிருந்து மொத்தமாக கொள்முதல் செய்து, தனது கிராமத்தில் வியாபாரம் செய்து வருகிறார். இதனால் இவருக்கு கூடுதல் வருமானம் கிடைக்கிறது. மாதம் ரூ.3,000/-முதல் ரூ.4,000/- வரை இலாபமாக பெற்று வருகிறார்.

தான் பெற்ற கடன் தொகையை முழுவதும் செலுத்தி முடித்து, திரும்பக் கடன் பெற்று தன் தொழிலை தொடர்ந்து நடத்தி வருகிறார். இவருடைய முயற்சியை அப்பகுதி மக்களும், ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களும் மனதார பாராட்டினார். மேலும் தனது வாழ்வாதார மேம்பாட்டிற்குக் காரணமாக இருந்த தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு திருமதி. பிரித்தா தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,31,500 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின்
**ஆதரவை தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th November 2023 Posted at Patrika Channel, Egmore.

நீங்கள் புதுமையான சிந்தனையாளரா?

# புதுமையான தொழில்நுட்பங்களை வழங்குபவரா?

# TNRTP திட்டத்திற்கு நீங்கள் தேவை...



## 10 புதுமையான ஊரகத் தொழில்கள்



வாழை நுண்ணூட்டக் கலவை உற்பத்தி


ஆகாயத்தாமரைத் தண்டு கைவினைப் பொருட்கள்



இயற்கை விதை உருளை (Bio Seed Roll) உற்பத்தி


மரத்தூள் எரிபொருள் உருளை (Lantana briquette) உற்பத்தி



நகரும் உணவகம் (EV Food Truck)


IOT தொழில்நுட்பத்தில் காளான் உற்பத்தி


நெல் தவிடு, தென்னை நாரில் மக்கும் தேனீர் கோப்பை தயாரிப்பு


நிலக்கடலைத் தோலில் மக்கும் தேனீர் கோப்பை தயாரிப்பு


இயற்கை வழியில் சானிட்டரி நாப்கின் (அணைப்பஞ்சு) தயாரிப்பு


மண்பாண்ட பொருட்கள் உற்பத்தி

**நிறுவனங்கள் அல்லது மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்**

இப்பொழுதே https://ideaforchange.tnrtp.org/ இணையதளத்தில் விண்ணப்பியுங்கள்!

### இவற்றுக்கு வழங்க வேண்டிய சேவைகள்

- சந்தை இணைப்புகள்
- வணிக அடையாளம்
- புதுமையான தொழில்நுட்பங்கள்
- உற்பத்திப் பொருட்களை சேமித்து வைக்க கிடங்கு
- கழிவுப்பொருட்களில் மதிப்புக் கூட்டும் தொழிற்திறன்
- சட்ட இணக்கம் மற்றும் வரவு செலவு கணக்கு சேவைகள்

## தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை– 600032, தமிழ்நாடு
(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP